தலைப்பு 007 – நீதிச் சேவைகள் ஆணைக்குழு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தலைப்பு 007 – நீதிச் சேவை ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுக்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆகஸ்ட் 14 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன. நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை நீதிச் சேவை ஆணைக்குழு, பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

2. ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன என்பதற்கு.

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	போதியவாறு வருடாந்த மதிப்பீட்டு நிதிஏற்பாட்டை ஒதுக்கிக் கொள்ளாததால் மீண்டெழும் 8 செலவின விடயங்களுக்கு மற்றும் மூலதன 02 செலவின விடயங்களுக்காக நிதிஏற்பாடு ரூபா 78,160,000 இனால் ரூபா 63,196,084 தொகை எஞ்சியிருந்ததுடன், அந்த சேமிப்பு 28 சதவீதம் முதல் 98 சதவீதமான வீச்சளவை கெண்டிருந்தது.	காகிதாதிகள் சிக்கனமாக பணன்படுத்தல், கட்டுநிதி கிடைக்காமை, ஆளணி ஆட்சேர்க்கப்பட்டிருக்காமை மற்றும் செலவின முகாமைத்துவம், சிரேஷ்ட உதவி செயலாளர் ஒருவர் இடமாற்றம் பெற்றதனால் திருத்த செலவினம் எஞ்சியமை, ஆண்டில் சில திருத்ங்களுக்கு உரிய விலை பட்டியல் கிடைக்காமை, இடமாற்றம் பெற்றதனால் திருத்த செலவினம் எஞ்சியமை, அரச செலவினம் முகாமைத்துவத்தின் கீழ் செலவினம் கடும் கட்டுப்பாட்டிற்கு உள்ளாக்குதல், ஆட்சேர்ப்பு பரீட்சை நடவடிக்கைகள் மற்றும்	தேவைபாட்டை இனங்கண்டு மதிப்பீட்டை தயாரிக்க வேண்டும்.

		பெறுகைகள் பலவீனம் நிலவியமை,	
(ஆ)	போதியவாறு தேவைபாட்டை இனங்காணாது நிதிஏற்பாடு ஒதுக்கிக் கொண்டதனால், 02 செலவின விடயங்களுக்கான மொத்த மதிப்பீட்டு நிதிஏற்பாடும் பயன்படுத்தாது எஞ்சியிருந்தது.	பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் சந்தர்ப்பத்தில், திருத்தப்பட்ட கட்டிடத்திற்கு இந்த அலுவலகத்தை கொண்டு செல்ல முடியாமலிருந்தமை மற்றும் தற்போது தற்காலிகமாக அலுவலகத்தை நடாத்தி செல்லும் இடத்தில் பொதுமக்களுக்கு தங்கியிருக்க மறைப்பொன்றை தயாரித்துக்கொள்வது தொடர்பான தேவைபாட்டை இனங்கண்ட போதும், அதற்காக நிதிஏற்பாடு போதாமை மற்றும் 2104 செலவின விடயத்திற்காக அரச செலவின முகாமைத்துவத்தின் கீழ் செலவினம் கடும் கட்டுப்பாட்டிற்கு உள்ளாகியமை மற்றும் ஆட்சேர்ப்பு மட்டுப்படுத்தப்பட்டதனால் அது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை.	தேவைபாட்டை இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்க வேண்டும்.

3.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரைகள்**
(அ)	ஆணைக்குழவின் நிதிக்குட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வ உள்ளக கட்டப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அந்த முறைமையின் செயற்திறமை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமைகளை ஆக்கபூர்வமாக மேற்கொண்டு செல்ல தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியதாகவும், அந்த மீளாய்வுகள் எழுத்து	நீதிச் சேவைகள் ஆணைக்குழுவில் செயற்திறமையான உள்ளக கட்டப்பாட்டு முறைமையொன்றை சான்றுறுதிப்படுத்துவதற்காக தேவையான சந்தர்ப்பங்களில் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படவதுடன், 2024 ஆண்டின் போது நி.பி 135 பிரகாரம் திருத்தப்பட்ட செலவினம் தொடர்பாக அதிகாரம் அளித்லை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.	2018 இன் 19 ஆம் இலக்க கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டியமை.

	மூலமாக மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வெண்டியிருந்த போதும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்தாக கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.		
(ஆ)	வருடாந்தம் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரத்தினுள் தயாரிப்பது மேற்கொள்ளப்பப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரியதான ஆண்டறிகையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் போறுப்பெற்க வேண்டிய போதும், அற்க்கையின் 4.1 பந்தியின் குறிப்பிடப்படும் கணக்காய்வு அவதானிப்புகள் காரணமாக அந்த தேவைபாட்டை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	நீதிச் சேவைகள் ஆணைக்குழுவில் வேலைகளின் தன்மை பிரகாரம் மற்றும் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் எண்ணிக்கையின் பிரகாரம் 2023 ஆண்டிற்குரிய செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கைகள் எடக்கப்பட்டு வருகிறது. 2024 ஆண்டிற்குரிய செயலாற்றுகை அறிக்கை தற்போது தயாரித்து முடிவடைந்ததுடன், அதன் மொழிப்பெயர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	2018 இன் 19 ஆம் இலக்க கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டியமை.
(இ)	உள்ளக கணக்காய்வு கடமைகள் உரியவாறு செயற்படுத்துவதற்காக ஆக்கபூர்வ முறைமையொன்று உள்ளது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதும, அறிக்கையின் 6.2 பந்தியின் குறிப்பிடப்படும் அவதானிப்புகள் பிரகாரம் அந்த தேவைபாட்டை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஆணைக்குழுவிற்காக உள்ளக கணக்காய்வு அலகொன்றை நிறுவுதற்காக ஆளணி அங்கிகரிக்ககப்ட்டுள்ளது. எனினும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தற்காலிக கட்டிடமொன்றில் நடாத்திச்செல்லப்படவதால், மேற் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆளணிக்காக போதுமான இடம் இல்லாத காரணத்தால் உள்ளக கணக்காய்வு அலகு நிறுவப்படவில்லை.	2018 இன் 19 ஆம் இலக்க கொண்ட தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டியமை.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

	அவதானிப்புக்கள்			பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	பெறுமதி ரூபா	இணங்காமை		
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவை - 237(ஆ)	425,027	களஞ்சிய வழங்கல்களுக்காக செலுத்தும் போது பொருகள் கிடைத்துள்ளதாகவும், உரிய பொருட் பதிவேட்டில் இருப்பு புத்தகம் ஆகியவற்றில் அந்த பொருட்களை உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், சான்றிதலொன்று இணைக்க வேண்டிய போதும், 02 கொள்வனவுகளுக்காக அவ்வாறு மெற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பொருட்கள் கிடைத்துள்ளதாக தனியான சான்றிதலொன்று இணைக்ககப்பட்டிருக்காததுடன், குறித்த பட்டியல்களில் கொடுப்பனவு செய்யும் சந்தர்ப்பம் வரை, உரிய சான்றுறுதியை குறிப்பிட்டிருந்தது.	நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை.
(ஆ)	**அரச நிதிச் சுற்றறிக்கை**				
	(i) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட சுற்றறிக்கையின் 11.1 பிரவு	-	2022 மற்றும் 2023 ஆண்டுகளில் பண்டக கணிப்பீட்டை மேற்கொண்டு முடிவுறுத்தும் காலஎல்லையினுள் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், அதற்கு இணங்காதவாறு நடவடிக்கை எடுத்திருந்தது.	2022 ஆண்டு மற்றும் 2023 ஆண்டிற்குரிய பண்டக கணிப்பீடு உரிய காலஎல்லையினுள் தாமதமின்றி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன்.	சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய காலஎல்லையினுள் பண்டக கணிப்பீட்டு நடவடிக்கை செய்ய வேண்டும்.
	(ii) 2022 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 02/2020 கொண்ட சுற்றறிக்கையின் 10.2 பிரவு	-	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின்	நீதிச் சேவைகள் ஆணைக்குழுவில் நடவடிக்கைகளின் தன்மை பிரகாரம் மற்றும் காணப்படும்	சுற்றறிக்கையின் பிரகாரம் வரைபு வருடாந்த செயலாற்றல் அறிக்கையை

	பிரகாரம் 2024 வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரைபு வருடாந்த செயலாற்றல் அறிக்கையை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை.	மட்டப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் எண்ணிக்கை பிரகாரம் 2024 ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கையை தற்போது தயாரித்து முடிவுறுத்தியுள்ளதுடன், உங்களிடம் சமர்ப்பிக்க தற்போது தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	சமர்ப்பிக்கப்பட வேண்டியமை.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.1 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களை கடக்க முன்னர் முன்வைப்பதற்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும், 2022 ஆண்டின் செயலாற்றல் அறிக்கையை 555 நாட்கள் காலதாமதத்துடன் 2024 திசெம்பர் 05 ஆம் திகதி பாராளுமன்றத்திற் முன்வைப்பதற்காக சமர்ப்பித்திருந்தது. அவ்வாறே 2023 ஆண்டின் செயலாற்றல் அறிக்கையை 2025 ஜுலை 01 ஆம் திகதி 396 நாட்கள் தாமதத்துடன் பாராளுமன்றத்திற் முன்வைப்பதற்காக சமர்ப்பித்திருந்தது.	2023 ஆண்டின் செயலாற்றல் அறிக்கையை தற்போது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளின் தன்மை பிரகாரம் மற்றும் காணப்படும் மட்டப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் எண்ணிக்கை பிரகாரம் 2024 ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கையை தற்போது தயாரித்து முடிவுறுத்தியுள்ளதுடன், உங்களிடம் சமர்ப்பிக்க தற்போது தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	சுற்றறிக்கை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடக்க வெண்டும்.

4.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	அரச பெறுகைகள் வழிக்காட்டிக் கோவையின் 4.2.2(அ) பந்தியின் பிரகாரம் பெறுகைகள் ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் இருந்து நிறைவு செய்யும் வரை ஒவ்வொரு பெறுகை செயற்பாடுகளின் படிமுறை காலஒழுங்கின்படி விபரிக்கும் பதிவேடொன்று தயாரிக்க வேண்டிய போதும், ஆணைக்குழுவினால் அவ்வாறான பதிவேடொன்றை தயாரித்திருக்கவில்லை.	நடைமுறைரீதியான காரணங்களின் மீது பெறுகைக்குரிய ஒவ்வொரு படிமுறைகளிற்குரிய காலக்கட்டங்கள் நிரந்தரமாக மாற்றமடைவதால் பெறுகைகள் திட்டம் ஆண்டு பூரா தொடர்ந்தும் மாற்றப்பட வேண்டியதனால், அந்த அந்த பெறுகையை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் பெறுகை செயன்முறையில் படிமுறையுடன் விரிவான பெறுகைகள் திட்டமொன்றை 2025 ஆண்டு முதல் தயாரித்தல் மேற்கொள்ளப்படும்.	பெறுகைகள் வழிக்காட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	பெறுகைகள் வழிக்காட்டிக் கோவையின் 4.2.1 பந்தியின் பிரகாரம் குறைந்ததாக 03 வருடககாலத்திற்காக எதிர்ப்பார்த்த பெறுகைகள் நடவடிக்கைகள் உள்ளடங்கிய பிரதான பெறுகைகள் திட்டமொன்றை தயாரிக்க வேண்டிய போதும், ஆணைக்குழுவினால் அவ்வாறான பிரதான பெறுகைகள் திட்டமொன்றை தயரித்திருக்கவில்லை.	முன்று வருட ககாலத்திற்காக எதிர்ப்பார்த்த பெறுகைகள் நடவடிக்கைகள் உள்ளடங்கிய பிரதான பெறுகைகள் திட்டமொன்றை தயாரிக்க எதிர்வரும் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்படும்.	பெறுகைகள் வழிக்காட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 ஏப்ரல் 27 ஆம் திகதிய எம்எஸ்டீடப்/08/65 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசிவராசிகள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கடிதத்தின் பிரகாரம் நிறுவனத்தினால் 2022 ஆம் ஆண்டுக்கான	திணைக்களத்தினால் 2022 ஆண்டிற்காக அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு அந்த நிலைபெறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதை ஒருங்கிணைப்பதற்கு	நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரித்து செயற்படுத்த வேண்டும்.

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் குறிகாட்டிகள் இனங்கானபட்டு அந்த நிலைபெறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதை ஒருங்கிணைப்பதற்கு உத்தியோகத்தர்களை நியமித்து நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் தயாரிக்கப்படுவதாக குறிப்பட்டிருந்த போதும், அவ்வாறான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை.	உத்தியோகத்தர்களை நியமித்து நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6. நல்லாளுகை

6.1 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய இலக்கம் 05/2008 மற்றும் 2018 சனவரி 24 ஆம் திகதிய 05/2008 (i) கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் அரச பிரிவின் செயற்பாடுகளை மிகவும் செயற்திறனாக்க மற்றும் அதற்காக தொடர்ப்புபடும் தரப்பினர்களுக்கிடையில் சிறந்த புரிந்துனர்வு மற்றும் ஒவ்வொருவர்களிற்கிடையில் நம்பிக்கை மேம்படுத்த பிரஜைகள்/சேவைபெறுநர் சத்தியப் பிரமாணத்தை அறிமுகப்படுத்தல் அனைத்து அரச நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்த போதும், ஆணைக்குழுவினால் அவ்வாறான பிரஜைகள்/சேவைபெறுநர் சத்தியப் பிரமாணத்தை அறிமுகப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய மற்றும் 2018 சனவரி 24 ஆம் திகதிய முறையே இலக்கம் 05/2008 மற்றும் 05/2008 (i) கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் பிரஜைகள்/சேவைபெறுநர் சத்தியப் பிரமாணத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு உள்ளக கணக்காய்வு நடவடிக்கை மேற்கொள்வதற்காக அந்த ஆணைக்குழவின் கட்டப்பாட்டு சபையினால் நியமனம் செய்யப்படும் தமது உள்ளக கணக்காய்வளர் ஒருவர் இருக்க வெண்டிய போதும், ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்ட்ட ஆளணியினுள் உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்றை உள்ளடக்கப்ட்டிருந்த போதும், அந்த பதவி வெற்றிடமாக காணப்பட்டது. மேலும், 2019 சனவரி 12 ஆம் திகதிய இலக்கம் DMA/01-2019 கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 03 பந்தி பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நேரடி மேற்பார்வையின் கீழ் இலங்கை கணக்காளர் சேவையின் I ஆம் தர உத்தியோகத்தர் ஒருவரின் தலைமையின் உள்ளக கணக்காய்வு பிரிவொன்று அனைத்து விஷேட செலவின அலகுகளிற்காக நிறுவ வேண்டிய போதும், ஆணைக்குழுவினுள் உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை நிறுவப்பட்டிருக்கவில்லை.	ஆணைக்குழுவிற்காக உள்ளக் கணக்கய்வு அலகைான்றை நிறுவுவதற்காக ஆளணியர்களை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனினும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தற்காலிக கட்டிடமொன்றில் நடாத்திச் செல்வதால், மேலே அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆளணியினரிற்காக போதிய இடம் இல்லாததனால் உள்ளக கணக்காய்வு அலகொன்றை நிறுவப்படவில்லை.	கணக்காய்வு அதிகரச்சட்டம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியன்று ஆணைக்குழுவிற்காக	நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தற்போது உள்ள	ஆளணியினர் வெற்றிடங்களை

	அங்கீகார ஆளணி 117 ஆன போதும், அத்திகதிக்கு 14 பதவிகளில் 82 ஊழியர்களனது பற்றாக்குறையும், 08 பதவிகளில் 29 மிகையும் காணப்பட்ன. அதன் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆளணியினர் தற்போதைய நிலைமைக்கு தயார் செய்து கொள்ள அல்லது அங்கீகரிக்கப்ட்ட பதவிகளை பூர்த்தி செய்து அல்லது மிகை பதவிகளை அங்கீகரித்திற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஆளணியினர்களும் போதாமல் தற்காலிக கட்டிடமொன்றில் நடாத்திச் செல்வதுடன், அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சியிருக்கும் 08 பதவிகளில் 29 உத்தியோகத்தர்களினால் தற்போது வெற்றிடமாக காணப்படும் 14 பதவிகளில் 82 உத்தியோகத்தர்களினது பணிகளை பூர்த்தி செய்துகொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. அங்கீகரிக்கப்ட்ட ஆளணியினர் 117 ஆன போதும், 64 உத்தியோகத்தர் போன்ற குறைந்தபட்ச எண்ணிக்கையினால் நீதிச் சேவைகள் ஆணைக்குழவின் கட்டளை பிரகாரம் முழுமையான நீதிமன்ற தொகுதியில் மேற்பார்வை, வழிநடாத்துதல் மற்றும் நிர்வாகத்திற்குரிய அனைத்து நடவடிக்கைகள் இந்த செயலகத்தின் மூலம் உரியவாறு நடாத்திச்செல்லப்படும்.	பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினருள் இல்லாத 03 நீதிமன்ற பதிவாளர் பதவிகளை (Courts Registrar) SL 1 சம்பள அளவுத்திட்டத்திலும், ஒரு நீதிமன்ற பதிவாளர் (Courts Registrar) பதவி MN 7 சம்பள அளவுத்திட்டத்திலும், அமர்த்தப்பட்டிருந்தது.	நீதிமன்ற தொகுதியில் மேற்பார்வை, வழிநடாத்துதல் மற்றும் நிர்வாகம் தொடர்பான அறிவு மற்றும் அனுபவம் நீதிமன்ற பதிவாளர்களிடம் இருப்பதால், அந்த பதவியை முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் மூலம் அங்கீகரித்திற்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.	தொடர்புடைய பதவியை முகாமைத்தவ சேவைகள் திணைக்களம் மூலம் அங்கீகரித்துக் கொள்ள வேண்டும்.
(இ)	அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினருள் MN 7 சம்பள அளவுத்திட்டத்தில் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (Court Stenographer) பதவியொன்றை அங்கீகரிக்காமல் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.	நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பொறுபிற்கிடையில் ஒட்டு மொத்த நீதிமன்ற தொகுதியில் புலனாய்வு நடவடிக்கை மேற்கொள்ளல் முக்கிய இடத்தை பெறுகின்றது. இந்த அலுவலகத்தில் நம்பிக்கைக்கு பொருத்தமானவாறு சேவை செய்ய பொருத்தமான தகுதிவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரை பெற்றுக்கொள்ளும் வரை (அரச சேவைக்கு புதிய ஆட்சேர்ப்பு இடை நிறுத்தப்பட்டுள்ளதால்) அந்த உத்தியோகத்தரினால் அந்த கடமையை பூர்த்தி செய்துகொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.	பதவிகளை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ)	2018 சனவரி 24 திகதிய 02/2018 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி பிரகாரம் மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று ஆணைக்குழுவினால தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை	உரியவாறு தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டமொன்றை தயாரித்திருக்காத போதும், நீதிமன்ற பதிவாளர் சேவை மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களினது சேவையில் அனைத்து பதவிகளில் உத்தியோகத்தர்களின் செயலாற்றுகை மதிப்பிடவதற்காக நீதிமன்றங்களின் வினைத்திறனை மற்றும் ஆக்கபூர்வ தன்மையை அதிகரிப்பதற்கு மிகவும் வழிவகுக்கும் நடைமுறை செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையொன்றை உத்தேசம் செய்வது எனும் நோக்கங்கள் ஊடாக மீளாய்வு செய்து அறிக்கையிட தற்போதுகுழுவொன்றை நியமித்துள்ளதுடன், அதன் நடவடிக்கைகள் நிரைவேற்றதன் பின்னர் உரிய பரிந்துரைகள் நீதி சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்துள்ளது. அதன் பிரகாரம் உரிய முன் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது.	சுற்றறிக்கை பிரகாரம் மனிதவள திட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.